28th February 1969]

போடுவது போன்றவற்றை அந்தந்த காலங்களில் தெரிவிப்பதில்லை, யோசனை சொல்வதில்லை. அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** விவசாய இலாகாவில் பணியாற்றுகிற ஊழியர்கள் இதுவரையிலும் இல்லாத அளவுக்குக் கடந்த இரண்டாண்டுகளாக விவசாயிகளோடு நெருங்கிய தொடர்பு கொள்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் ராமசாமி முதலியார் அவர்கள் சென்னையிலேயே பெரும்பாலும் இருப்பதால் ஒருவேளை அதிகாரிகள் கிராமங்களுக்குப் போவது தெரியாமல் இருந்திருக்கலாம். பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள் மூலமாகச் சர்க்காருடைய திட்டங்களை, பூச்சிமருந்து, விதைபற்றிய விஷயங்களை விளம்பரம் செய்துவருகிறார்கள்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** நேரடியாக விவசாயம் செய்யும் விவசாயிகளுக்குக் கோடை காலங்களில் விவசாயக் கல்லூரி இல்லாததால், நவீன முறையில் விவசாயம் பற்றி பயிற்று விக்க கட்டணம் இல்லாத வகுப்புகள் நடத்த, குறுகிய கால வகுப்புகள் நடைபெற, அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அத்தகைய பயிற்சிகள் பட்டுக்கோட்டை, பவானிசாகர் முதலிய இடங்களில் விவசாயி களுக்கு அளிக்கப்படுகிறது. விவசாயக் கல்லூரிகளில் காட்சிப் பொருள்களாக விவசாயிகளுக்குக் காண்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நம் நாட்டு விவசாயிகள் மட்டுமல்ல, வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் கூட அதில் பலன் பெறுகி றார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the fact that the radio is a powerful medium of mass communication, may I know whether there is any co-ordination between the Department of Agriculture of the Government of Tamil Nadu and the All India Radio in broadcasting news regarding the various new developments that have taken place in the agricultural sector ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வானொலி மன்றங்கள் மூலம் கிராம விவசாயிகளுக்கு செய்திகள் அறிவிக்கப்படுகின்றன. ஆங்காங்கு வானொலி சங்கங்கள் அமைத்து, அவர்களிடமிருந்து கேள்விகளைப் பெற்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஆராய்ச்சி யாளர்களிடமிருந்து பதில் பெற்று ஒலிபெருக்கி மூலமாக அறிவிக்கப்படுகிறது.

### *Misbehaviour of a Sub-Inspector*

* 61. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state —

(*a*) whether any complaint had been received regarding the indecent behaviour of a Sub-Inspector towards a lady clerk working in the Fort St. George, Madras, during October 1967; and

(*b*) if so, the action taken thereon ?

[28th February 1969

### சப்-இன்ஸ்பெக்டர் தகாத முறையில் நடந்த சம்பவம்

**திரு. என். ஆர். தியாகராஜன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை கோட்டையில் வேலை பார்க்கும் ஒரு பெண் குமாஸ்தாவிடம் 1967 அக்டோபர் மாதத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் தகாத முறையில் நடந்ததாக புகார் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) குற்றவாளிகளான காவல் துறைப் பணியாளர்கள், தமிழ்நாடு காவலர் சார்நிலைப்பணி (ஒழுங்கு நடத்தை மேல் முறையீட்டு) விதிகளைச் சேர்ந்த 3 (b) விதியில் சொல்லப்பட்டுள்ள தடை முறைப்படி விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர் அவர்கள் வாங்கி வரும், அடிப்படைச் சம்பளத்தில் ஒரு சம்பள உயர்வு அளவுக்குச் சம்பளம் குறைக்கப்பட்டு, அவ்வாறு குறைக்கப்பட்ட சம்பளத்தில் ஓராண்டுக் காலம் பணியில் செலவழிக்க வேண்டும் என்று அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

**திரு. என். ஆர். தியாகராஜன்:** தலைவர் அவர்களே, வேலியே பயிரை மேய்ந்த கதையாக போலீஸ் அதிகாரி தவறு செய்திருக்கும்போது, சின்ன தண்டனையாக, மிகக் குறைந்த தண்டனையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தண்டனைதான் இந்த டிபார்ட்மெண்டில் இந்தக் குற்றத்திற்காக கொடுக்கவேண்டுமென்று இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஒரு பெண்ணை காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று அடித்ததாகத்தான் குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அந்த விசாரணையின் முடிவுக்கு ஏற்பத்தான் இந்தத் தண்டனை அளிக்கப்பட்டது.

**திரு. டி. சந்தோஷம்:** அதுபற்றி நீதி மன்றத்தில் கிரிமினல் வழக்கு ஏதேனும் தொடரப்பட்டதா? அப்படியானால் அதன் முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வழக்கு தொடரப்பட்டதாக தகவல் இல்லை.

**திரு. டி. சந்தோஷம்:** ஒரு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று ஒரு பெண்ணை அடித்தால் அது கிரிமினல் குற்றம் என்று அரசாங்கம் கருதவில்லையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சந்தேகத்தின் பெயரால் இருவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரிக்கும் போது, அந்த அதிகாரி அந்தப் பெண்ணை அடித்ததாகப் புகார்.